






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 29 16.07.2025



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்



# முத்துக்கள்

**ஸ்ரீமத் பாகவத்திலிருந்து**
**நன்றி: நாவல்பாக்கம் வாசுதேவாசாரியார்**

1. ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாளுக்கு ரத்நாங்கி விஸேஷம்; திருமலையில் திருவேங்கமுடையானுக்கு மகரகண்டி ஆபரணம் விஸேஷம்; காஞ்சி தேவப்பெருமாளுக்கு தொப்பஹாரம் விஸேஷம். இப்படியெல்லாம் அந்தந்த பெருமாள் பெருமைகளைப் பேசலாம். ஆனால் அழகை அனுபவிக்கவேண்டு-மானால், வைகுண்ட ஏகாதஸியன்று ஸ்ரீரங்கம் போய் ஸேவித்தால் தான் ரத்நாங்கி ஸேவை உண்டு; திருமலையிலும் காஞ்சியிலும் கருடஸேவை ஸேவித்தால்தான் அந்த அழகு புரியும்.

2. பாகவதா:-
1. எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு மட்டுமே பகவான் என்று திருநாமம்.
2. பெருமாளுடைய புராணக்கதைக்கு மட்டுமே பாகவதம் என்று பெயர்.
3. பெருமாளுடைய பக்தர்களுக்கு மட்டுமே பாகவதர்கள் என்று பெயர். இதையெல்லாம் பாகவதபுராணமே சொல்கிறது.
இந்த பாகவதர்கள் தாம் உலகத்தையே பரிசுத்தமாக்குகிறார்கள்.

3.பகவான் என்றாலே தோஷமில்லாமல் கல்யாண குணங்களை மட்டும் கொண்டவன் என்று அர்த்தம். பூமி மாதா, 39 குணங்களைக் குறிப்பிடுகிறார். இவையும், இன்னும் பல குணங்களும் அவனிடம் உள்ளன. மனிதர்கள், அவனிடம் கேட்டு இவற்றைப்பெறுகிறார்கள். ஆனால் அவனிடம் இவை அளவற்றவையாய், குறையாமல் (தோஷம் இல்லாமல்) உள்ளன. அவனே குணபாத்திரம். எல்லாவற்றுக்கு மேல், அவன் ஸ்ரீநிவாஸன். அத்தனை குணங்களும் கொண்ட பிராட்டியின் கேள்வன்.

4.ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மற்றொரு பெரிய ஸ்ரீவைஷ்ணவரிடம் அபசாரப் பட்டுவிட்டார். அதனால் பெரியவரும் இவரை விட்டு விலகி, இவரை விலக்கி இருந்தார். இவருடன் பேசுவதையெல்லாம் நிறுத்திவிட்டு, முகம் பார்க்காமல் இருந்தார். பின் ஒரு ஸமயம் அந்த ஸ்ரீவைஷ்ணவர், தன் தவறை உணர்ந்து வருந்தினார். பெரியவரிடம் வந்து மன்னிப்பும் கேட்டார். உடன் பெரியவர், பெரிய மனது பண்ணி அவரை மன்னிப்பது மட்டும் போதாது. அவரை உதாசீனப்படுத்தி, பேசாமல் பார்க்காமல் தாம் அவரிடம் நடந்துகொண்ட முறையும் தவறு என உணர்ந்து, அதற்காக அவரிடம் இந்த பெரியவரும் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டுமாம்.

5. மனிதர்க்கு எல்லாவிதத்திலும் எங்கும் எப்போதும் கேட்கப்படவேண்டியவன், சொல்லப்பட வேண்டி யவன், நினைக்கப்படவேண்டியவன் பகவான் ஹரி ஒருவனே."

6. மரணத்தருவாயில் இருந்த பரீக்ஷித் மஹாராஜன், பெரும் பாக்யம் செய்தவனாக தன்னை நினைத்தான். ஏனெனில், அப்போது ஸுகாசார்யர் அங்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பரம அனுக்ரஹமே, ஆசார்யரை அங்கு கொண்டு வந்து விட்டதாக நினைத்தான்.
அவன் ஆசார்யரிடம் கேட்ட கேள்வி மிகச்சுருக்கமானது. "மனிதர்கள் எதைப்பற்றி கேட்கவேண்டும் ? எதை ஜபம் செய்ய வேண்டும் ? எதை ஸ்மரிக்க வேண்டும்?"
ஸுகாசார்யர் சொன்ன பதில் 'ஹரி' என்பதே.
பகவான் ஹரியையே எப்போதும் கேட்கவேண்டும், ஜபம் செய்ய வேண்டும்; ஸ்மரிக்க வேண்டும்.

7. 1. ஸர்வாத்மனா - ஒரு விதத்தில் பார்த்தால் ஒரு பதில். மற்றொரு விதத்தில் வேறு பதில் என்பது இல்லை எல்லாவிதத்திலும் ஒரே பதில்தான்-ஹரி.

2. ஸர்வத்ர - ஒரு இடத்தில் ஒரு பதில், வேறொரு இடத்தில் வேறு பதில் என்பதில்லை. எல்லா இடத்திலும் ஒரே பதில் - ஹரி.

3. ஸர்வதா - ஒரு சமயம் ஒரு பதில். வேறொரு சமயத்தில் வேறு பதில் என்பது இல்லை. எப்போதும் ஒரே பதில்- ஹரி.

4.ச்ரோதவ்ய: கீர்திதவ்யச்ச ஸ்மர்தவ்ய:- கேட்பது ஒரு-வரை, பேசுவது மற்றொருவரை, நினைப்பது மற்றொருவரை என்பது கிடையாது. பகவான் ஹரி ஒருவர்தான் எல்லாவற்றுக்கும்; அவரையே பேச வேண்டும். நினைக்க வேண்டும். கேட்க வேண்டும். இதுவே பாகவதம் காட்டும் ஸித்தாந்தம்.

இதைச்சொல்லிவிட்டு சுகர் ஹரிகதையை ஆரம்பிக்கிறார். அவர் சாதித்த ஹரி கதைதான் பாகவதம். அதையேதான் நாமும் கேட்கவேண்டும் என்று ஆகிறது.

8.சூரியன் உதித்தால், பகல் வந்ததே என சந்தோஷப்படுகி-றார்கள்; ஒடுகிறார்கள்; உண்கிறார்கள். சூரியன் அஸ்தமனம் ஆனால் இரவு வந்ததே என சந்தோஷப்படுகிறார்கள்; உறங்-குகிறார்கள். ஒவ்வொரு தடவை உதிக்கும்போதும், மறையும் போதும் தன் வாழ்நாள் குறைவதைப் புரிந்துகொள்வதேயில்லை என்கிறது.

9.எந்த பலன் வேண்டுமானாலும் சரி, பகவானிடம் பக்தி செய்யவும். ஒரு பலனுமே வேண்டாம் என்றாலும் சரி பகவானிடம் பக்தி செய்யவும் - என்று பாகவதம் சொல்கிறது.

**10. ஶ்ரீமத்பாகவதத்தை முதன்முதலில் பகவான் ஶ்ரீமன் நாராயணன், தன் மகனான ப்ரஹ்மதேவனுக்கு வெளியிட்டான்; பின் அவர் அதை தன் மகன் நாரதருக்கு உபதேசம் செய்தார்; நாரதர் ஶ்ரீ வேதவ்யாசருக்கு அதை உபதேஸம் செய்தார்; வ்யாஸ பகவான் தன் மகனான ஶ்ரீஸுகருக்கு அதை உபதோம் செய்தார். இப்படி ஒரே ஒரு பரம்பரையில் மட்டும் இந்த பாகவதம் வந்து கொண்டிருந்தது.**

**பின் ஸுக மஹர்ஷி இதை பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேஸம் செய்தார்; அப்போது அநேக மஹர்ஷிகள் கூட இருந்து கேட்டனர்; அவர்களில் ஒருவர் ஸூதபௌராணிகர்; அவர் சௌநகர் முதலிய மஹர்ஷிகளுக்கு ஶ்ரீமத்பாகவத கதை சொன்னார். அப்போதும் பல பேர் இதைக் கேட்டு ரசித்தனர்.**
**இப்படி ஒரே ஒரு பரம்பரையில் மட்டும் இருந்த பாகவதம் உலகம் முழுவதும் பரவக் காரணம் ஸுகமஹர்ஷியும் பரீக்ஷித் மஹா ராஜனும் தான்.**

11. பகவான்:-
*ஶ்ரீராமாயணத்தை பரப்புவதற்காக வால்மீகியையும் லவ-குசர்களையும் சேர்த்து வைத்தான்.

*பகவத்கீதையை பரப்புவதற்காக வைசம்பாயனரையும் ஜனமேஜயனையும் சேர்த்து வைத்தான்.

*திருமந்த்ரப் பொருளை பரப்புவதற்காக ராமானுஜரையும் நம்பிகளையும் சேர்த்து வைத்தான்.

*பாகவதத்தை பரப்புவதற்காக ஸுகரையும் பரீக்ஷித்தை யும் சேர்த்து வைத்தான்.

